மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். அது அங்கே நிலுவையிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உச்ச நீதிமன்றம் என்பது டெல்லியிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: உயர் நீதிமன்றத்திலே இந்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 145, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சருடைய வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 146, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

146—

கிராமப்புறங்களில் பணியாற்றும் மின் வாரிய ஊழியர்களுக்கு வாகனம் வழங்குதல்.

*9365—திரு. என். ஆர். சிவபதி:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பணியாற்றும் மின் வாரிய ஊழியர்களுக்கு அரசின் சார்பில் வாகன வசதி (50 சி.சி. மொபட்) வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம மக்கள், வளர்ந்து வரும் வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க வேண்டும் என்று வழிவகை செய்துள்ள நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில், கிராம மக்கள் புகழ்ந்து பேசுகிற இந்தக் காலக் கட்டத்தில் ஏதாவது ஒரு கிராமத்தில் மின் தடை வருகிறபோது உடனே

1994 மார்ச் 30]

அதை கவனிக்க அந்த மின் ஊழியர்களுக்கு வாகன வசதி இல்லாமல் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே ஒரு மின் நிலையத்திற்கு ஒரு மொபெட் என்றாவது வழங்கி இந்த மின் தடையை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உட்கோட்ட அலுவலகத்திற்கும் அவசர கால ஊர்திகள் இருக்கின்றன. இதனை வைத்து பயன்படுத்தித்தான், மின் தடைகள் ஏற்படுகின்றபோது, அந்த ஊழியர்கள் அங்கே சென்று, அதனை சரி செய்கிறார்கள். அத்துடன் தனிப்பட்ட முறையிலே 1,620 ரூபாய்க்கு மேலே அடிப்படை சம்பளம் பெறுபவர்களுக்கு மொபெட் வாங்குவதற்காக வாரியத்திலேயிருந்து கடன் வசதி வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட திட்டத்திற்கான, செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஏற்கனவே இருக்கின்ற வசதிகளை வைத்துத்தான் பணிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 147, திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

147—

வைகையாற்றில் மேலும் ஒரு பாலம் அமைத்தல்

* 10052— திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை ஆற்றின் மேல், மேலும் ஒரு பாலம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை நகரில் வைகை ஆற்றின் குறுக்கே அண்ணா நகரையும் காமராசர் சாலையையும் இணைக்கும் வகையில் பாலம் அமைக்க ரூ. 487 இலட்சத்திற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் அதாவது டெக்னிக்கல் சாங்ஷன் அளிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்மட்டப் பாலத்திற்கான அணுகுசாலை Approach Road